பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 வைகாசி 22 வியாழக்கிழமை (05-06-1997) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 189

# ஒட்டிசுட்டான் பகுதியை நோக்கி படையினர் ஆட்லறித் தாக்குதல்!

முச்சந்தி முரளி



அப்ப பிரேமாவின் கதிதான் கட்சிக்குமோ...?

## பெரும் எண்ணிக்கை மக்கள் இடம் பெயர்வு

கொழும்பு, ஜூன் 5

ஒட்டிசுட்டான் பகுதி மீது படையினர் நேற்று முன்தினம் கடும் ஆட்லறி ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

வன்னிப் பகுதியில் படையினர் மக்கள் குடியிருப்புகள் மீது ஆட்லறித் தாக்குதல்களை நடத்தி வருவதாகவும், ஒட்டிசுட்டான் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 6 பொது மக்கள் படுகாயமடைந்ததாகவும் புலிகளின் குரல் வானொலி நேற்றுத் தெரிவித்தது.

நெடுங்கேணியில் நிலை கொண்டுள்ள படையினரே ஒட்டிசுட்டானை நோக்கி ஆட்லறி தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் காலை முதல் மாலை வரை ஆட்ல

(8 ஆம் பக்கம் பார்க்க)

புலிகள் பற்றிய செய்தி வெளியிட்ட

## ரி. என். எல். தொலைக்காட்சி செய்திப் பணிப்பாளர் விடுதலை!

கொழும்பு, ஜூன் 5

கொழும்பு தனியார் ரி. என். எல். தொலைக்காட்சிச் செய்திப் பணிப்பாளர் திருமதி இசானி விக்கிரமசிங்க நேற்றுக் கோட்டை நீதிவான் மேர்வின் காமினி விஜயதுங்கவினால் விடுதலை செய்யப்பட்டார்.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் 28 ஆம் திகதி வெல்லாவெளி அதிரடிப்படை முகாமை விடுதலைப் புலிகள் தாக்கியதையடுத்து அதிரடிப்படை வாபஸ் பெறப்பட்டது என்ற செய்தியை ரி. என். எல். தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்பியதாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் அவர் மீது வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இவ்வழக்கு நேற்றுக் கோட்டை நீதிவான் முன்னிலையில் எடுக்கப்பட்ட சமயம் இரகசியப் பொலிஸார் எழுத்து மூல அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தனர்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பிரேமாவின் பெயரில் விரைவில் புதிய கட்சி

### சிறிசேன கூரே தலைவர்

கொழும்பு, ஜூன் 5

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவின் ஆதரவாளர்கள் புதிய கட்சி ஒன்றைஆரம்பிக்க உள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

''ஐக்கிய பிரேமா கட்சி'' என்ற பெயரில் ஆரம்பிக்கப் படவிருக்கும் இக்கட்சிக்கு ஐ. தே.கவின்முன்னாள் செயலாளர் சிறிசேன கூரே தலைமை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் 2 பொலிஸார் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலி!

### பொங்கல் விழாவின் பின் சம்பவம்

திருகோணமலை, ஜூன் 5

திருகோணமலையில் இருந்து 3 மைல் தூரத்தில் உள்ள சல்லிக் கிராமத்தில் நேற்று அதிகாலை ஒரு சப் இன்ஸ்பெக்டர் உட்பட இரு பொலிஸார் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து படையினரால் பொது மக்கள் தாக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப் பட்டது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

சல்லி அம்மன் கோயிலில் நேற்று முன்தினம் இரவு பொங்கல் விழா நடைபெற்றது.

அந்தப் பொங்கல் விழாவுக்குச் சென்ற பொது மக்களில் ஒரு பகுதியினர் அன்று

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அனுருத்தவின் மகன் லொஹான் விடுதலை!

கொழும்பு, ஜூன் 5

றகர் பயிற்சியாளரும் பப்புவாநியூகினிப் பிரஜையுமான ஜோயல் பெரா கொலை தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவின் மகன் லொஹான் ரத்வத்த நேற்று கோட்டை நீதிவான் மேர்வின் காமினி விஜயதுங்கவினால் விடுதலை செய்யப்பட்டார்.

சட்டமா அதிபர் சார்பில் அறிக்கை ஒன்று நீதிவானிடம் சமர்ப்பிக்கப்பட்டதையடுத்து போதிய சாட்சியங்கள் இல்லை என்று தெரிவித்து லொஹான் ரத்வத்த உட்பட மூவரை நீதிவான் விடுதலை செய்தார்.

இந்த வழக்கு தொடர்பான ஏனைய மூன்று சந்தேக நபர்களையும் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

நேற்றைய விசாரணையின்போது கொலை செய்யப்பட்ட பெராவின் மனைவி நீதிமன்றத்தில் சமுகமளித்திருந்தார். இவரின் நலனைக் கவனிக்க சட்டத்தரணி குமார் பொன்னம்பலம் ஆஜரானார்.

சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணி திலக் மாரப்பன ஆஜரானார். [இ-21-3-5]

## செனஹிட்ஸ் ஊழல் வழக்கில் ராவ் விடுதலை

செனஹிட்ஸ் போலி ஆவண தயாரிப்பு ஊழல் வழக்கில் முன்னாள் பிரதமர் பி.வி. நரசிம்மராவ் குற்றமற்றவர் என்று டில்லி நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## லயன் எயர் விமான சேவை இடைநிறுத்தம்

கொழும்புக்கும், பலாலிக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் ''லயன் எயர்'' விமான சேவை நேற்று முதல் ஒருவார காலத்துக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளதாக கொழும்பு செய்திகள் தெரிவித்தன.

யாழ்ப்பாணம் செல்வதற்காக இரத்மலானைக்கு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நெடுங்கேணியில் கைப்பற்றியது புலிகளின் உணவுக் களஞ்சியமா?

### புளொட் ஆச்சரியம் தெரிவிப்பு

வவுனியா, ஜூன் 5

நெடுங்கேணியில் விடுதலைப் புலிகளின் உணவுக் களஞ்சியத்தை படையினர் கைப்பற்றியதாக கடந்த முதலாம் திகதி ரூபவாஹினிச் செய்தியிலும் மறுநாள் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் செய்தியிலும் தெரிவிக்கப்பட்டிருப்பது ஆச்சரியம் தருகிறது.''

இப்படி புளொட் அமைப்பின் வவுனியா மாவட்ட அரசியல் அமைப்பாளர் பார்த்திபன் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இராணுவ நடவடிக்கை ஆரம்பிப்பதற்கு முன்னதாக நெடுங்கேணி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளுக்கு அரசாங்கம் உணவு வகைகளை அந்தந்தப்பகுதிப் ப. நோ. கூ. சங்கங்கள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்று 2 மணி நேரம் பஸ் சேவை ஸ்தம்பிதம்

### உறுதிமொழியின் பின் வழமை நிலை

யாழ்ப்பாணம், ஜூன் 5

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் சாரதி ஒருவர் கடமை நேரத்தில் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தை ஆட்சேபித்து யாழ். டிப்போ ஊழியர்கள் நேற்றுக் காலை 8.30 மணிக்கு திடீர்வேலை நிறுத்தத்தில் குதித்தனர்.

நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் யாழ். டிப்போவில் இருந்து கோண்டாவில் டிப்போ நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ் ஒன்றை அவ் வீதியால் டிராக்டர் ஒன்றில் சென்ற படையினர் சோதனை நிலையம் ஒன்றுக்கு அருகில் வைத்து மறித்ததாகவும் —

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இரு வெவ்வேறு சம்பவங்களில் மட்டக்களப்பில் 3 பொதுமக்கள் பலி

### 5 மாணவர்கள் உட்பட 15 பேர் காயம்

மட்டக்களப்பு, ஜூன் 5

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று இடம்பெற்ற இரு வேறு சம்பவங்களில் 3 பொது மக்கள் உயிரிழந்தனர்: 5 பாடசாலை மாணவர்கள் உட்பட 15 பேர் காயமடைந்தனர்.

முதலாவது சம்பவம் நேற்றுக் காலை 10 மணியளவில் இடம்பெற்றது;

பட்டிருப்புப் பாலம் சோதனை நிலையத்தில் விடுதலைப் புலி உறுப்பினர் என சந்தேகிக்கப்படும் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்: அவரிடம் இருந்து ரி56 துப்பாக்கி ஒன்று; இரு கைக் குண்டுகள்,

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## ஆறுமுகம் - இராசையா

(ஸ்தாபகர், ஆ. இராசையா அன் சன்ஸ் (மருந்துக்கடை) K K.S. றோட், யாழ்ப்பாணம், இராசையா கமம் 3 ஆம் வாய்க்கால் பன்னைக் கண்டி, பரந்தன்)

ஆ. இராசையா 31 - 5 - 97 சனிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் ஆறுமுகம் தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற தங்கம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, சிவபாக்கியம் ஆகியோரது சகோதரரும், இரத்தினசபாபதி (கனடா), இரத்தினபூபதி (கனடா), இராசரத்தினம், இந்திராதேவி, இராமநாதன் (டாக்டர், லண்டன்) ஆகியோரது தந்தையாரும், சத்தியபாமா (கனடா), தியாகராஜா (கனடா), சோதிமலர், இராசரத்தினம் (உதவி அரச அதிபர், நெடுங்கேணி), வசந்தி (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற ஸ்ரீதரன் மற்றும் ஸ்ரீவதனி, இளங்கோவன் (கனடா), இளம்சேய் (கனடா), அனுஷியா (கனடா), ரஜிதா, விஜிதா, இராஜசெழியன், ரஜனி, இராஜசேரன், மகிந்தன் (ஆஸ்திரேலியா), முகுந்தன், ரதி (லண்டன்), குமரன் (லண்டன்) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
ந. கேதீஸ்வரன்
(பேரன்)

90, (40) சட்டநாதர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(47625)

## கனகசபை இராசரத்தினம்

இணுவிலைப் பிறப்பிடமாகவும், தற்பொழுது மாங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை இராசரத்தினம் 01-06-97 இல் மாங்குளத்தில் காலமானார்.

இவர் திரு. திருமதி கனகசபை ஆகியோரின் அன்புப் புதல்வரும், செல்வராணியின் அன்புக் கணவரும், மோகனா (இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம்), பகிதரன் (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), சுவேதிகா (யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், காலஞ் சென்றவரான வல்லிபுரம் மற்றும் சரஸ்வதி ஆகியோரின் அன்பு மருமகனும், க. குணரத்தினம், க. பஞ்சலிங்கம் (வவுனியா), க. சின்னத்தம்பி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், வ. செல்வநாதன் (பிரான்ஸ்), வ. சுந்தரலிங்கம் (லிங்கம் — கிளிநொச்சி), வ. தனபாலரட்ணம் (கண்ணன் — மாங்குளம்) ஆகியோரின் மைத்துனரும், திருமதி இந்திராணி (கிளிநொச்சி), வ. ஜெயராணி (யாழ். போதனா வைத்தியசாலை, ஆய்வுகூடம்), திருமதி புஷ்பராணி (கரவெட்டி), வ. வசந்தராணி (கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், திருமதி யமுனாதேவி (இந்தியா), நாகேந்திரம் (கிளிநொச்சி), ஜானகி (கிளிநொச்சி), உதயகுமார் (கரவெட்டி), சந்திராதேவி (மாங்குளம்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 2 - 6 - 97 இல் மாங்குளத்தில் நடைபெற்றன. அவரின் துக்க நிகழ்வுகள் இல: 15, பொற்பதி றோட் கொக்குவில் எனும் முகவரியில் நடைபெறுகின்றன என்பதை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
வல்லிபுரம் ஜெயராணி
(மைத்துனி)

இல: 15, பொற்பதி றோட்,
கொக்குவில்

(47631)

## க. கந்தசாமி (ராஜன்)

சங்கத்தானை, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் பிறப்பிடமாகவும் கொண்டவரும் பிரபல கட்டட ஒப்பந்தக்காரருமாகிய கந்தசாமி (ராஜன்) அவர்கள் 31 - 05 - 1997 அன்று ஜேர்மனியில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கந்தையா மற்றும் சின்னம்மாவின் அன்புப் புத்திரனும், தெல்லிப்பழை கொல்லன்கலட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாக்கியதேவியின் அன்புக் கணவரும், லதர்சன், மகிசா ஆகியோரின் அன்புத் தந்தையாரும், தியாகராஜா (ஜேர்மனி), பரமராசா (சின்னத்தம்பி, மேசன், சங்கத்தானை), குணராஜா (ஜேர்மனி), தேவரத்தினம், சந்திராதேவி, இந்திரேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பத்மாதேவி (ஆசிரியை, சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரி) இந்திராதேவி, தர்மலிங்கம் (மேசன்), கணபதிப்பிள்ளை (சாரதி, சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவு), பாலகிருஷ்ணன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

இவரது இறுதிக் கிரியைகள் 07-06-1997 சனிக்கிழமை K. Kandasamy, Seppenrader Street, 11A 59348 Luding Hausen West Germany இல் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்:
சி. பாலகிருஷ்ணன்
(மைத்துனர்)

"திருமகால்"
சங்கத்தானை,
சாவகச்சேரி.

(47629)

---

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
### பட்டமளிப்பு விழா இராமநாத நினைவுப் பேருரை கைநூல்கள் அழைப்பிதழ்கள் அச்சிடல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவுக்கான கைநூல்களும் அழைப்பிதழ்களும் அச்சிடுவதற்கு அனுபவம் உடைய அச்சகர்களிடமிருந்து கேள்விப்பத்திரம் அழைக்கப்படுகின்றது.

1. கேள்விப் பத்திரதாரர் யாழ். பல்கலைக்கழக உதவி நிதியாளர் வழங்கல்களுடன் தொடர்பு கொண்டு மாதிரியைப் பார்வை இடலாம்.
2. கேள்விப்பத்திரதாரர் மீளளிக்கத்தகாத வைப்புப் பணமாக ரூபா 250/- ஐ நிதியாளரிடம் செலுத்தி அதற்கான பற்றுச் சீட்டுடன் கேள்விப் பத்திரங்களை 17-6-97 காலை 10.00 மணிக்கு முன்னர் பதிவாளரது அறையில் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் தபால் மூலமாகவோ நேரடியாகவோ சமர்ப்பிக்க வேண்டும்.
3. கேள்விப் பத்திரங்கள் அன்றையதினம் காலை 10.30 மணிக்குத் திறக்கப்படும்.

**பதிவாளர்**
நிதிக்கிளை,
யாழ் பல்கலைக்கழகம்
04-06-97

(சி/ 872)

---

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
### மரத்தால் ஆன கதிரைகளை வழங்குவதற்கான கேள்விப்பத்திரம்

யாழ். பல்கலைக்கழகத்துக்கு மரத்தால் ஆன 75 கதிரைகளைச் செய்து வழங்குவதற்கான கேள்விப்பத்திரம் அழைக்கப்படுகின்றது.

1. கேள்விப்பத்திரதாரர் யாழ். பல்கலைக்கழக உதவி நிதியாளர் வழங்கல்களுடன் தொடர்பு கொண்டு மாதிரியைப் பார்வையிடலாம்.
2. கேள்விப்பத்திரதாரர் மீளளிக்கத்தகாத வைப்புப் பணமாக 1000/- ரூபாவை நிதியாளரிடம் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டுடன் கேள்விப் பத்திரங்களை 17 - 06 - 1997 காலை 10-00 மணிக்கு முன்னர் பதிவாளரது அறையில் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் தபால் மூலமாகவோ, நேரடியாகவோ சமர்ப்பிக்க வேண்டும்.
3. கேள்விப் பத்திரங்கள் அன்றைய தினம் காலை 10-30 மணிக்குத் திறக்கப்படும்.

**- பதிவாளர்**
நிதிக்கிளை,
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்.
04-06-1997

(சி/872)

---


தெய்வீக சுகமளிக்கும்

## சுவிசேஷ ஆராதனை

இடம்: உதயசூரியன் ஒழுங்கை
கச்சாய் வீதி, சாவகச்சேரி.
காலம்: 6.6.97 வெள்ளிக்கிழமை
நேரம்: காலை 10 மணி முதல் 2 மணி வரை

**யாவும் இலவசம்**

யாவரும் பங்கு கொள்ளவும்

வியாதி, துன்பம், பில்லி சூனிய கட்டுகளிலிருந்து இயேசு விடுதலை தருகிறார்.

உதயசூரியன் ஒழுங்கை,
கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

இரட்சிப்பின் சத்தம்
விசுவாசிகள் சபை.

(47636)


---

## கண்ணீர் அஞ்சலி

அகாலமரணமடைந்த
வடபிராந்திய போக்குவரத்துச் சபை
கோண்டாவில் சாலையைச் சேர்ந்த சாரதி

### இளையதம்பி சிவலிங்கம்

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபை
சகல அதிகாரிகளும், சக ஊழியர்களும்.

(47632)

---

# மரண அறிவித்தல்கள்

## மயில்வாகனம் குணரட்ணம்

(ஓய்வு பெற்ற தபாலதிபர், சுன்னாகம்)

சுன்னாகம் தெற்கைச் சேர்ந்த மயில்வாகனம் குணரட்ணம் 27.05.97 அன்று இராமநாதபுரத்தில் காலமானார்.

அன்னார் யோகராணியின் அன்புக் கணவரும், கேதீசன் (சுவிஸ்), பாமா (இராமநாதன் கல்லூரி, உயர் தர வகுப்பு மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். இவரின் இறுதிக்கிரியைகள் இராமநாதபுரத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:
ம. கனகலிங்கம்

உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

(47638)

## குணரட்ணம் சுந்தரலிங்கம்

இளவாலை வடக்கு, இளவாலையைச் சேர்ந்த குணரட்ணம் சுந்தரலிங்கம் 03 - 06 - 1997 அன்று அகால மரணமானார்.

இவர் சித்திரமேழி இளவாலையைச்சேர்ந்த காலஞ்சென்றவர்களான குணரட்ணம், நல்லபிள்ளை ஆகியோரின் இளைய மகனும், தவமலரின் அன்புக் கணவரும், கிஷோக்குமார் (இளவாலை மெய்கண்டான் ம. வி), ஜெயஜெனனி (இளவாலை கன்னியர் மடம்) ஆகியோரது பாசமிகு தந்தையும், தருமலிங்கம், அன்னபாக்கியம் (மலேசியா), பார்வதிப்பிள்ளை (கொழும்பு), புண்ணியலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காராளசிங்கம் (மலேசியா), வீரசிங்கம் (கொழும்பு), கனகாதேவி, ஜீவேந்திராதேவி, கமலாதேவி, (நைஜீரியா), கோமதி (சுவிஸ்), பானுமதி (நோர்வே) ஆகியோரின் மைத்துனரும், தருமராஜசிங்கம் (நைஜீரியா). வேலாயுதம் (சுவிஸ்), இரவீந்திரன் (நோர்வே) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (5. 6. 97) காலை 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும் என்பதை அனைவருக்கும் அறியத் தருகின்றோம்

தகவல்:
சு. கிஷோக்குமார்
(மகன்)

இளவாலை வடக்கு,
இளவாலை.

(47626)

## திருமதி
## சின்னம்மா இராமகிருஷ்ணன்

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி அம்மன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா இராமகிருஷ்ணன் 4 - 6 - 97 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற இராமகிருஷ்ணனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தங்கச்சி அம்மா, சரஸ்வதி, முருகையா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று திருநெல்வேலியில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. சுப்பிரமணியம்
(சகோதரன்)

அம்மன் வீதி,
திருநெல்வேலி.

(47635)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய செய்மதி பயணம்

புதுடில்லி, ஜூன் 5

இந்தியாவின் தொலைத் தகவல் தொடர்பு செயற் கைக்கோள் 'இன்ஸாட் 2டி' நேற்றுக் காலை வெற்றிகர மாக விண்ணில் செலுத்தப் பட்டுள்ளது.

பிரெஞ்சு கயானாவில் உள்ள ஏவுதளம் ஒன்றிலி ருந்து இந்திய நேரப்படி நேற்று காலை 4-55 மணிக்கு இந்த செயற்கைக்கோள் விண்ணில் ஏவப்பட்டது.

செயற்கைக்கோள் சுற்றுப் பாதையில் வெற்றிகரமாக வலம் வரத் தொடங்கியுள்ள 'இன்ஸாட் 2டி' இந்தியாவி லுள்ள விண்வெளி ஆராய்ச்சி நிலையம் ஒன்றில் தயாரிக் கப்பட்டது.

அண்டை நாடுகளிலும் இந் தியாவிலும் தொலைத் தொடர்பு வசதிகளை அளிக் கும் இந்த செயற்கைக்கோள் எதிர்வரும் ஜூலை மாதத் தில் இருந்து செயற்படத் தொடங்கும். 'இன்ஸாட் 2டி' விண்ணில் செலுத்தப் பட்டது நாட்டின் சாதனை களில் மற்றுமொரு மைல் கல் என்று பிரதமர் ஐ. கே. குஜ்ரால் தெரிவித்துள்ளார். (ஐ-5)

# 300 நைஜீரிய துருப்புகள் பிறீரவுனில் சிறைபிடிப்பு!

## மனித கேடயங்களாக்கப்படுவர் என எச்சரிக்கை

பிறீரவுன், ஜூன். 5

சியராலியோனில் சிவில் ஆட்சியை சதிப் புரட்சி மூலம் கைப்பற்றிய இராணுவக் கிளர்ச்சியாளர்கள் தாங்கள் முன்னூறுக்கு மேற்பட்ட நைஜீரியப் படையினரை சிறைப் பிடித்துள்ளதாக அறிவித்துள்ளனர்.

பதவியில் இருந்து நீக்கப்பட்ட அதிபர் கபாவை மீண்டும் பதவியில் அமர்த்தும் நடவடிக்கையாக கடந்த திங்களன்று தலை நகர் பிறீரவுனுக்குள் பிரவேசித்த நைஜீரியப் படைகள் கிளர்ச்சியாளர்களின் கடும் தாக்கு தலை அடுத்துப் பின் வாங்கின.

அங்கு நடந்த கடும் சண்டையின் போது பல நூற்றுக்கணக்கான நைஜீரியப் படையி னர் கிளர்ச்சியாளர்களிடம் சரணடைந்த னர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சரணடைந்த சுமார் 300 நைஜீரியத் துருப்புக்களை மனித கேடயமாகப் பயன் படுத்தவுள்ளதாக கிளர்ச்சியாளர்கள் தெரி வித்துள்ளனர்.

தற்போது பிறீரவுனில் சண்டை ஓய்ந் துள்ளது. ஆயினும் பெரும் பதற்றத்துக்கு மத்தியில் வெளிநாட்டுப் பிரஜைகள் அங்கி ருந்து தொடர்ந்து வெளியேற்றப்பட்டு வரு கின்றனர்.

திங்களன்று நடந்த சண்டையில் நைஜீ ரியப் படைகளுக்கு கிடைத்த தோல்வி பல ரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

இதேவேளை—

சியராலியோனின் புதிய இராணுவ ஆட்சியாளர்கள் தமது ஆளும் சபை பற்றி அறிவித்துள்ளனர். அமைச்சரவை பின்னர் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள் ளது (ஐ)

# இஸ்ரேல் தொழிற்கட்சிக்கு புதிய தலைவர்

ரெல் அவிவ், ஜூன் 5

இஸ்ரேலின் எதிர்க்கட்சி யான தொழிற் கட்சியின் புதிய தலைவராக முன்னாள் இராணுவத் தளபதி எஹோட் பராக் தெரிவு செய்யப்பட்டி ருக்கிறார்.

கூடிய விரைவில் தேர்தலை நடத்தக் கூடியதாக பிரதமர் பெஞ்சமின் நத்தனியாகுவை பதவி கவிழ்க்கப் போவதாக அவர் சூளுரைத்துள்ளார்.

புதிய தலைவரைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நேற்று முன்தினம் நடை

உலக அரங்கில்

பெற்ற போது இவருக்கு 51 சதவீத வாக்குகள் கிடைத் தன.

சுமார் ஒரு வருடத்துக்கு முன்னர் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தோல்வியடைந்த முன்னாள் பிரதமர் சீமோன் பெரஸிடம் இருந்து தொழிற் கட்சியின் தலைமைப் பொறுப்பை தளபதி பராக் ஏற்றுள்ளார்.

பலஸ்தீனியர்களுக்கு சுய நிர்ணய உரிமை வேண்டும் என்று பராக் தெரிவித்துள் ளார். (ஐ)

# சென்னைப் படைத் தளத்தில் திடீரென இறங்கிய சவுதி விமானம்

## விமானியின் தவறால் பெரும் பரபரப்பு

சவுதி அரேபியா ''எயார் லைன்ஸ்'' விமானம் ஒன்று 361 பயணிகளுடன் சென்னையில் உள்ள இந்திய விமானப் படைத் தளத்துக்குள் திடீரெனத் தரை யிறங்கியதை அடுத்து அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

சென்னை மீனம்பாக்கம் சர்வதேச விமான நிலையத்தில் தரை இறங்குவதற் காக நேற்று முன்தினம் வந்து கொண்டி ருந்த இந்த 'ஜம்போ - 747' ரக விமானம் தாம்பரம் விமானப்படை நிலையத்தில் திடீரெனத் தரையிறங்கியது.

விமானம் ஒன்று முன் அனுமதியின் றித் திடீரென இறங்கியதைக் கண்ட விமானப் படையினர் உஷாரடைந்து தீப்பிளம்புகளை வெளிப்படுத்தும் எச் சரிக்கை வேட்டுக்களை வானைநோக் கித் தீர்த்தனர்.

ஆனால் விமானம் மெதுவாக அங்கு தரையிறங்கியது.

8 ஆயிரம் அடி நீளமான ஓடுபாதை யில் இறக்கப்படவேண்டிய இந்த விமா னத்தை 5 ஆயிரம் அடி நீளமான தாம்பரம் விமானத்தள ஓடு பாதையில் விமானி இறக்கியுள்ளார்.

விசாரணை முடியும் வரை விமானம் அங்கு தடுத்து வைக்கப்பட்டது. தீவிர பரிசோதனையின் பின்னர் இது ஓர் எதிர் பாராத சம்பவம் எனத் தெரிவிக்கப்பட் டது. (ஐ)

# நேபாளத்தில் குஜ்ரால்

புதுடில்லி, ஜூன் 5

இந்தியப்பிரதமர் இந்தர் குமார் குஜ்ரால் நேபாளத் தில் மூன்று நாள் அரச முறைப் பயணமாக இன்று காத்மண்டு செல்கிறார்.

இரு நாடுகளுக்குமிடையே மின்சாரம் பரிமாற்றம் செய் வதற்கான ஒப்பந்தம் ஒன் றில் அவர் கையெழுத்திட வுள்ளார்.

நேபாள பிரதமர் லோகேந்திர பகதூர், மன் னர் பிரேந்திரா மற்றும் அரசியல் தலைவர்களையும் குஜ்ரால் அங்கு சந்திப்பார். (ஐ-5)

# மீண்டும் வாக்களிப்பு

ஜகார்த்தா, ஜூன் 5

இந்தோனேசியாவில் 111 வாக்களிப்பு நிலையங்களில் மீண்டும் வாக்களிப்பு நடத் தப்பட உள்ளது.

குழப்பங்கள் மற்றும் வாக் களிப்பு மோசடி குற்றச் சாட்டுகள் காரணமாக இந்த வாக்களிப்பு நிலையங் களில் மீண்டும் வாக்களிப்பு நடத்த அரசாங்கம் உத்தர விட்டுள்ளது.

இந்தத் தேர்தலில் ஆளுங் கோல்கார் கட்சி அமோக வெற்றி ஈட்டி உள்ளது. (இ)

# அஸாம் பல்கலை. வளாகத்துக்குள் இந்தியத் துருப்புகள் நுழைந்தன!

## மாணவர்கள், கல்விமான்கள் ஆட்சேபம்!!

புதுடில்லி, ஜூன் 5

அஸாம் தீவிரவாதிகள் ஊடுருவி இருப்பதாகக் கூறி இந்தியாவின் பிரபல கௌஹாத்தி பல்கலைக்கழக வளாகத்துக்குள் இந்திய இராணுவம் திடீரென நுழைந்துள்ளது.

எவ்வித முன்னறிவித்தலும் இன்றி இராணுவம் வளாகத் துக்குள் பிரவேசித்து முகா மிட்டிருப்பதாக பல்கலைக் கழக அதிகாரிகள் தெரிவித் தனர்.

இந்திய இராணுவத்தின் இந்த நடவடிக்கை குறித்து கௌஹாத்தி பல்கலைக்கழக மாணவர்களும், கல்விமான் களும் கண்டனம் தெரிவித் துள்ளனர்.

தமது நடவடிக்கை குறித்து முன்கூட்டியே பல்கலைக்கழக நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு பேசாமல் எடுத்த இந் நடவடிக்கை பாரம்பரிய வழிமுறைகளை மீறிய செயல் என அவர்கள் குற் றஞ்சாட்டியுள்ளனர்.

ஆயுதம் தரித்த துருப்பு கள் பல்கலைக் கழகத்துக்குள் நடமாடித் திரிகின்றனர்.

அஸாம் மாநிலத்தின் ஐக் கிய விடுதலை முன்னணி (யு. எல். எவ்) தீவிர வாதிகள் கௌஹாத்தி பல்கலைக் கழ கத்துக்குள் செயற்படுவதாக அண்மைக்காலமாக அறிக் கைகள் வெளிவந்துள்ளன. (ஐ)

# சோனியா வர வழி விட்டு யாவரும் விலகுங்கள்

## வாழப்பாடி கோருகிறார்



சென்னை, ஜூன் 5

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் பதவிக்குப் போட்டியிட முன் வந்துள்ள அனைவரும் போட்டியில் இருந்து உடனடியாக விலகி திருமதி சோனியாகாந்தியைத் தலைவராக ஏக மனதாகத் தெரிவு செய்யவேண்டும்.

காங்கிரஸ் கட்சியின் தமிழ் நாடுபிரி வின் முக்கிய தலைவரான வாழப்பாடி ராமமூர்த்தி இவ்வாறு தெரிவித்தார்.

தலைமைப் பதவியை ஏற்பதும் மறுப்பதும் சோனியாவின் விருப்பம். அவர் தலைவர் பத வியை ஏற்கமறுத்தால் தற்போதைய தலைவர் சீதாராம் கேசரிக்கு எதிராக நாம் நிச்சயம் செயற்படுவோம்.

காங்கிரஸ் கட்சியின் ஒழுங்கீனங்கள் தமிழ் நாட்டில் மட்டுமல்ல இந்தியா முழுவதும் நடைபெற்றுள்ளன. இத் தகைய ஒழுங்கீனங்களுக்கு சீதாராம் கேசரியின் ஆதரவும் உண்டு—என்று வாழப்பாடி மேலும் கூறியுள்ளார். (ஐ)

# ★ போசாக்கு உணவின்றி $7\frac{1}{2}$ லட்சம் குழந்தைகள் ஈராக்கில் பாதிப்பு

தெஹிரான், ஜூன் 5

ஈராக்கில் சுமார் ஏழரை லட்சம் குழந்தைகள் உரிய போஷாக்கு உணவின்றிப் பாதிக்கப்பட்டிருப்பதாக ஐ. நா. புள்ளி விவரம் ஒன்று தெரிவிக்கிறது.

ஈராக் மக்களின் சத்துணவு நிலைமை குறித்து வெளி யிடப்பட்ட ஐ. நா. அறிக்கை இதனைத் தெரிவித்துள்ளது.

போஷாக்கு குறைவு காரணமாக ஈராக்கிய குழந்தை களின் வளர்ச்சி எதிர்காலத்தில் குன்றிவிடும் என்று எச் சரிக்கப்பட்டுள்ளது.

உணவுக்காக எண்ணெய் என்ற ஒப்பந்தத்தின் கீழ் ஈராக்கில் இருந்து எண்ணெய் ஏற்றுமதி செய்யும் உடன் படிக்கையை மேலும் ஆறு மாதங்கள் நீடிக்க ஐ. நா. பாது காப்புச் சபை அனுமதி அளிக்கும் என எதிர்பார்க்கப்படு கிறது. (ஐ)

# தென்கொரியாவில் மாணவர் ஆர்ப்பாட்டம்

சோல், ஜூன் 5

தென்கொரிய தலை நக ரான சோலில் சுமார் 10 ஆயிரம் மாணவர்கள் ஆர்ப் பாட்டம் நடத்தினர்.

ஜனாதிபதி கிங்யங்-சாம் பதவி விலகவேண்டும் என்று மாணவர்கள் கோரி வருகின் றனர்.

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் தென்கொரியாவின் யொன்சி பல்கலைக் கழகத் தில் இடம்பெற்ற மாணவர் வன்முறைகளுக்குப் பின்னர் இதுவே மோசமான சம்பவ மாகக் கருதப்படுகிறது.

ஜனாதிபதி கிங்யங்-சாம் தேர்தல் செலவீனங்களை வெளியிட வேண்டும் என்று தென்கொரிய மாணவர் களின் பிரதான கோரிக்கை யாகும். (இ)

# சீனாவில் 15 பேருக்கு மரண தண்டனை

தென்கிழக்கு சீனாவில் கடத்தல், பயமுறுத்தல், கொலை செய்தல் ஆகிய குற் றச் செயல்களுக்காக 15 பேருக்கு மரண தண் டனை விதிக்கப்பட்டுள்ளது.

# கியூபா தொடர்பான அமெரிக்கக் கொள்கை

## ஜமாய்க்கா பிரதமர் கண்டனம்

ஹவானா, ஜூன் 5

கியூபா தொடர்பாக அமெ ரிக்கா கடைப்பிடிக்கும் கொள் கைகள் தவறானவை என்று ஜமாய்க்கா பிரதமர் பேர் சிவல் சட்டர்சன் தெரிவித் துள்ளார்.

கியூபாவில் மேற்கத்திய பாணி ஜனநாயக அரசியல் முறை ஒன்றைக் கொண்டுவர அமெரிக்கா மேற் கொள்ளும் முயற்சி தவறானது என்றும் அவர் கூறினார்.

கடந்த 35 வருட காலமாக அமெரிக்கா விதித்துள்ள பொருளாதாரத் தடையை யும் ஜமாய்க்கா பிரதமர் கண்டித்துள்ளார்.

அமெரிக்க ஆதரவு சர்வாதி காரியான புல்ஜென்சியோ பட்டிஸ்டாவை 1959 இல் பதவி கவிழ்த்துவிட்டு காஷ்ட்ரோ ஆட்சியை கைப் பற்றி இருந்தார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரிவுபசார விழா

பழைய மாணவர் சங்கத் தலைவியும்,
மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையின்
இளைப்பாறிய அதிபருமாகிய

### திருமதி M. G. தவரட்ணம்

அவர்களை கௌரவிக்கும் முகமாக பழைய மாணவர் சங்கத்தினால் நடத்தவிருக்கும் பிரிவுபசார விழாவில் பங்கு கொள்ள விரும்பும் பழைய மாணவர் சங்க உறுப்பினர்களை சங்கச் செயலாளருடன் 06 - 06 - 97 (வெள்ளிக் கிழமை) இற்கு முன் பாடசாலையில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நிர்வாகக் குழு உறுப்பினர்கள்,
மெ. பெ. உ. பா. பழைய மாணவர் சங்கம்,
பருத்தித்துறை.

(சி/870)



## ஓராண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 17 — 04 — 1939



இறப்பு: 13 — 06 — 1996

### அமரர் வல்லிபுரம் கணேஸ்

( டிலக்ஸ் வீடியோ உரிமையாளர் )

குடும்பத்தின் ஒளி விளக்காகவும்
பாசமிகு கணவனாகவும்
அன்பு மிகு அப்பாவாகவும்
மதிப்பு மிகு மாமனாகவும்
நிறை பாசமிகு பேரனாகவும்
இருந்து மறைந்து விட்ட எம் தெய்வமே!
ஓராண்டு சென்றாலும் மறைந்திடுமோ நின்மலர்
முகம்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்;
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளை: டிலக்சன்

3 ஆம் கட்டை,
கட்டைப்பிராய்,
யாழ்ப்பாணம்.

(47623)



## நான்காம் ஆண்டு நினைவுகள்

உதிப்பு: 23 — 10 — 1926



உதிர்வு: 22 — 05 — 1993

### அமரர் வல்லிபுரம் சங்கரப்பிள்ளை

(கைதடியூர் விவசாய நண்பன்)

திதி: 05 — 06 — 1997

அன்பினால் ஆட்சி செய்து அனைவரையும்
உயரவைத்து
நன்னிலத்தை நயமுடன் வளம்படுத்தி – விவசாய
நண்பன் என நானிலத்தில் பெயரெடுத்து
நின்பிரிவு வேதனைகள் ஊற்றாய்ப் பெருக
கண்ணுக்கு எட்டாமல் காதவழி போனதென்ன?
ஆண்டுகள் நான்கு போனதுவே
கண்களில் நீர் வழிய நாம் தவிக்கின்றோம்.

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கைதடி கிழக்கு,
கைதடி.

(சி/845)


## முட்டை 4 ரூபா

தென்மராட்சி, ஜூன் 5

தென்மராட்சிப் பகுதி சந்தைகளில் முட்டை விலை பெரும் வீழ்ச்சியடைந்துள்ளது. கடந்தவாரம் 7 ரூபா வரை விற்கப்பட்ட முட்டை நேற்று முன்தினம் 4 ரூபாவுக்கு விற்கப்பட்டது.

கோழித்தீனின் விலை அதிகரித்துள்ள போதிலும் முட்டையின் விலை வீழ்ச்சியடைந்துள்ளமை கோழி வளர்ப்போரைப் பாதித்துள்ளது.

(ஐ-117)

## ஏ. ஆர். வி. வந்தது

தென்மராட்சி, ஜூன் 5

சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு விசர்நாய்க் கடிக்கு ஏற்றப்படும் விசர்நோய்த் தடுப்பூசி மருந்து ஒரு தொகுதி வந்துள்ளது.

இத் தடுப்பூசி மருந்து இல்லாததால் விசர்நாயினால் கடியுண்ட பலர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு சென்று சிகிச்சை பெறவேண்டியிருந்தது குறிப்பிடத்தக்கது.

(ஐ-117)

## குப்பி விளக்கால் எரிகாயம்

தென்மராட்சி, ஜூன் 5

குப்பி விளக்கு சரிந்து தீப்பற்றிக் கொண்டதில் இளம் குடும்பப் பெண் எரிகாயங்களுக்கு உள்ளான சம்பவம் கடந்த திங்கட்கிழமையன்று சாவகச்சேரி பொலீஸ்நிலைய வீதியில் இடம்பெற்றது.

சுழிபுரத்தைச் சேர்ந்த பாலேந்திரன் சகுந்தலாதேவி (வயது 29) என்பவரே எரிகாயங்களுக்கு உள்ளாகி சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ஐ-117)

## காய்ச்சலால் குழந்தை மரணம்

தென்மராட்சி, ஜூன் 5

காய்ச்சலால் பீடிக்கப்பட்ட இரண்டு வயது பெண் குழந்தை சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் உயிரிழந்துள்ளது.

பளை சோரன்பற்றைச் சேர்ந்த சோதிநாதன் சயந்தா என்னும் குழந்தையே மரணமானது.

(ஐ-117)

## சூழல் தினம் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 5

சர்வதேச சுற்றுச் சூழல் பாதுகாப்புக் குழுவின் யாழ். பிரிவு யாழ். ஆஸ்பத்திரியில் உள்ள அதன் பணிமனையில் நேற்று சர்வதேச சுற்றுச் சூழல் தினத்தைக் கொண்டியது.


## கணித பாட விசேட வகுப்புக்கள்

ஆண்டு 9, 10, 11
மீட்டல்!! கணித வகுப்புக்கள்
ஆரம்பமாகின்றன.

★ 10-06-97இற்கு முன் பெற்றோர் /பாதுகாவலர் உடன் வந்து பதிவு செய்யவும்.

★ ஒரு வகுப்பில் 15 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

★ சிறு குழுக்களாகவோ தனியாகவோ கற்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளவும்.

ஆசிரியர்:- N. K. K.

அரச வீதி,
[illegible]
[illegible]

(47622)


## கலப்படம் செய்யப்பட்ட கோழித்தீன் வகைகள்

### குடாநாட்டில் விற்பனை

அச்சுவேலி, ஜூன் 5

கலப்படம் செய்யப் பட்டு உள்ளூரில் தயாரிக்கப்பட்ட கோழித்தீன் வகைகள் அதிகரித்த விலையில் விற்பனை செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில வாரங்களாக கோழித்தீன் விலை அதிகரித்து வருகிறது.

சூழ்நிலையைப்பயன்படுத்தி தரம் குறைந்த கோழித்தீன் கிலோ 30 ரூபாவுக்கு குறையாத விலையில் விற்கப்படுவது தெரியவந்துள்ளது,

இதனால் கோழி வளர்ப்போர் உரிய அளவு முட்டையை பெற்றுக்கொள்ளாமல் வருமான இழப்புக்கு உள்ளாகி வருகின்றனர்.

(ஐ-11)

## தபாற்பெட்டி

பண்டத்தரிப்பு தபால் அலுவலகத்தினால் பொது மக்கள் நலன் கருதி புதிய தபாற் பெட்டி ஒன்று பண்டத்தரிப்பு சந்தியில் மகளிர் கல்லூரிக்கு முன்பாக நிறுவப்பட்டுள்ளது.

இத் தபால் அலுவலகத்திற்கு அண்மையில் கிடைத்துள்ள ஐந்து புதிய தபாற் பெட்டிகளில் ஒன்றே இவ்வாறு பண்டத்தரிப்பு சந்தியில் நிறுவப்பட்டுள்ளது.


## தேவை

பத்திரிகை மடித்தல், விநியோகம் ஆகியவற்றுக்கு ஆள்கள் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும்.

முகாமையாளர்
'உதயன்'
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



## MATHS CENTRE

M.M.V. Road, Nelliady.

### 99 A/L கலை, வர்த்தகப் பிரிவு

| | |
|---|---|
| பொருளியல் | — திரு. அன்ரனி / பிரபல ஆசிரியர் |
| அளவையியல் | — திரு. பிரபானந்தன் |
| வணிகக்கல்வி | — திரு. உதயமோகன் |
| வணிகப் புள்ளிவிவரவியல் | — திரு. திரிகரன் |
| கணக்கியல் | — திரு. பிரபாகரன் |
| தமிழ் | — திரு. கமலரூபன் |
| இந்துநாகரிகம் | — செல்வி மாதினி |
| இந்துசமயம் | — திரு. நவம் |

ஆரம்பம்: 07-06-1997 2-00 p.m.

### O/L DAY CLASS

| | |
|---|---|
| கணிதம் | — திரு. விமல்ராஜ் |
| விஞ்ஞானம் | — திரு. விஜயகுமார் / திரு. ஜெயானந்தம் |
| தமிழ் | — திரு. கமலரூபன் |
| சமூகக்கல்வி | — திரு. சிவநாதன் / திரு. தவம் |
| ஆங்கிலம் | — திரு. கந்தையா |
| சமயம் | — திரு. நவம் |

ஆரம்பம்: 05-06-1997 9-00 a.m.

### 98 A/L

| | |
|---|---|
| அளவையியல் | — திரு. பிரபானந்தன் |
| வணிகப் புள்ளிவிவரவியல் | — திரு. திரிகரன் |

ஆரம்பம்: 07-06-1997 9-00 a.m.

★ விவரங்களுக்கு நிர்வாகியுடன் தொடர்பு கொள்ளவும்.

(47624)



## கண்ணீர் அஞ்சலி

இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய
உயர்தர வகுப்பு மாணவன்
சு. கிஷோக்குமாரின் தந்தையார்
குணரட்ணம் சுந்தரலிங்கம்
அவர்கள்

அகால மரணம் அடைந்தமை கேட்டு அதிர்ச்சியும், வேதனையும் அடைகின்றோம். அவரது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்து, எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

மெய்கண்டான் மகாவித்தியாலயம்.
இளவாலை.

(47627)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# உடுவில் பிரதேச செயலகப் பிரிவு
# அபிவிருத்திப் பணிக்கு நிதி ஒதுக்கீடு

வலிகாமம் தெற்கு, ஜூன் 5

வலிகாமம் தெற்கு — உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்குரிய இந்த வருடத்துக்கான பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீடுகள் சம்பந்தமாக மாகாண சபையின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது.

இவ்வருடத்துக்கான பின்வரும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பிரதேச செயலர் பிரிவினால் பின்வரும் நிதித் தொகைகள் ஒதுக்கப்பட்டுள்ளன:

★ வீதிகள் புனரமைப்பு: இரண்டரை லட்சம் ரூபா — இதில் சுன்னாகம் — ஊரெழு எல்லை வீதி புனரமைப்புக்கென ஒரு இலட்சம் ரூபாவும், உடுவில் கற்பகப் பிள்ளையார் சிங்கத்தின் கலட்டி வீதி புனரமைப்புக்கென 75 ஆயிரம் ரூபாவும், குப்பிளான் — மாவத்தை வீதி புனரமைப்புக்கு 75 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ பொதுசுகாதாரம்: ஒரு இலட்சம் ரூபா மருத்துவ உபகரணங்கள் வழங்கலுக்கு இது பயன்படுத்தப்படும்.

★ கலாசார நடவடிக்கைகள்: விளையாட்டுக் கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்கல் — 50 ஆயிரம் ரூபா.

★ நீர்ப்பாசனம்: உடுவில் குளம்வாய்க்கால்புனரமைப்பு — ஒரு இலட்சம் ரூபா.

★ பயிர் அபிவிருத்தி: வீட்டுத் தோட்ட ஊக்குவிப்பு — 25 ஆயிரம் ரூபா.

★ கால்நடை அபிவிருத்தி: இயற்கை இன விருத்திமூலம் நல்லின மாடுகளை உற்பத்தி செய்வதற்கான காளைகளை பெரும் பண்ணையாளர்களுக்குசுழற்சி முறையில் வழங்கல் —50 ஆயிரம் ரூபா. இதே போல் ஆடுகளுக்கும் 50 ஆயிரம் ரூபா.

★ நீர் விநியோகம்: இராமநாதன் கல்லூரியில் குடிநீர் வசதி ஏற்படுத்துவதற்கு 30 ஆயிரம் ரூபா: சங்குவேலி முன் பள்ளி நிலையத்தில் குழாய்க் கிணறு அமைத்தலுக்கு 25 ஆயிரம் ரூபா.

★ பிரதேச நிர்வாகத்தை பலப்படுத்தல்: கிராம அலுவலர், பிரதேச செயலர் மட்டத்திலான புள்ளி விவரக் கையேடு தயாரித்தல் — 50 ஆயிரம் ரூபா.

★ உள்ளூர் சமூக ரீதியான அமைப்பை பலப்படுத்தல்: கிராம முன்னேற்ற சங்கங்களுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கல் — 50 ஆயிரம் ரூபா. இணுவில் கிராம முன்னேற்ற சங்க கட்டட புனரமைப்பு — 20 ஆயிரம் ரூபா.

(ஐ- 152)

## 'சீல்' வைக்கப்படாத இறைச்சி விற்பனை

கொக்குவில், கோண்டாவில் பகுதிகளில் உள்ள சில இறைச்சிக் கடைகளில் 'சீல்' வைக்கப்படாத இறைச்சி விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தது அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் கொக்குவில் மேற்கிலுள்ள இறைச்சிக் கடையொன்றிலும், கோண்டாவில் கிழக்குப்பகுதியிலுள்ள இறைச்சிக் கடையொன்றிலும் கொக்குவில் சுகாதார பரிசோதகர் ச. திவ்வியகுமார் மேற்கொண்ட திடீர்ப் பரிசோதனையின் போது அனுமதி பெறாது வெட்டப்பட்ட இறைச்சி விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. அந்த இறைச்சி முழுவதும் கைப்பற்றப்பட்டு புதைக்கப்பட்டது.

(ஐ-135)

## சாவகச்சேரியில் மதகுகள் புனரமைப்பு

சாவகச்சேரி, ஜூன் 5

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள மதகுகள் செப்பனிடப்பட்டு வருகின்றன.

மாரி காலத்தில் மிக அதிகளவில் வெள்ளம் பாய உதவும் உப்புக்கேணி மதகு, கிராம்புவில் மதகு, பெருங்குளம் — கற்குழ் மதகு ஆகிய மூன்றுமே பல லட்சம் ரூபா செலவில் செப்பனிடப்பட்டு வருகின்றன.

இம் மதகுகளை செப்பனிடுவதன் மூலம் கிராமப் புறங்களில் ஏற்படும் வெள்ளப் பெருக்கினை தடுக்க முடியும் என சாவகச்சேரி நகரசபை தொழில்நுட்ப அதிகாரி தெரிவித்தார்.

(ஐ-31)

## இருமாத குழந்தை மரணம்

காய்ச்சல், வயிற்றோட்டம் காரணமாக யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இரு மாதக் குழந்தை ஒன்று நேற்று அங்கு மரணமானது.

யாழ்ப்பாணம் திருநகரைச் சேர்ந்த (கரையூர்) சந்திரராசா குலேந்தினி என்ற பெண்குழந்தையே உயிரிழந்தது.

(ஐ-15)

## பண்டத்தரிப்பு ஆஸ்பத்திரி புதிய இடத்துக்கு மாறும்

திருநெல்வேலி, ஜூன் 5

தற்போது சித்தன்கேணி சந்திக்கு அருகாமையிலுள்ள கட்டடம் ஒன்றில் இயங்கி வரும் பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலை விரைவில் பண்டத்தரிப்புசந்தைக்கு சமீபமாகவுள்ள தனியார் கட்டடம் ஒன்றுக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளது.

கடந்த வாரம் யாழ். சுகாதார சேவைகள் பிரதி மாகாண பணிப்பாளர் டாக்டர் கே.ரி. சிவபாதம் புதிய இடத்தை நேரடியாகச் சென்று பார்வையிட்டார்.

பண்டத்தரிப்பு காடாப்புலத்தில் இருந்த இவ் வைத்தியசாலை வார்ட்டுகள், பிரசவ விடுதி, ஊழியர்களின் வசிப்பிட விடுதிகட்டடங்கள் யாவும் யுத்தகால அனர்த்தங்களின் போது பலத்த சேதமடைந்த நிலையில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ- 135)

## கருத்தரங்கு

திருநெல்வேலி, ஜூன் 5

சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய நூற்றாண்டை முன்னிட்டு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் உயர்தர வகுப்பு மாணவிகளுக்கான கருத்தரங்கு எதிர் வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் கல்லூரி அதிபர் திருமதி கே. பொன்னம்பலம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா கலந்து கொண்டு உரை நிகழ்த்துவார்.

(ஐ- 135)

## பிறேசில் முதலை ரக மண்வெட்டிகள் வந்தன

யாழ்ப்பாணம், ஜூன் 5

மீளக் குடியமர்ந்துள்ள விவசாயிகளுக்கு வழங்கவென 17 ஆயிரம் பிறேசில் நாட்டு முதலை ரக மண்வெட்டிகள் கடந்த வாரம் கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளன.

இவ்வாறு எடுத்து வரப்பட்டுள்ள மண்வெட்டிகளை விவசாயிகளுக்கு வழங்குவது தொடர்பாக கமநலசேவைகள் கேந்திர நிலையங்கள் ஆராய்ந்து வருவதாகவும்,

இது தொடர்பான விவரங்கள் விவசாய சம்மேளனங்கள் ஊடாகத் திரட்டப்பட்டு வருவதாகவும் —

விரைவில் இந்த மண்வெட்டிகளை மீளக்குடியமர்ந்துள்ள விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

(ஐ-5)

## லயன்ஸ் கழக கொடிவாரம்

சாவகச்சேரி, ஜூன் 5

சாவகச்சேரி லயன்ஸ்கழகத்தின் கொடி வாரம் எதிர் வரும் 14ஆம் திகதி தொடக்கம் 21 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

எதிர்காலத்தில் கழகத்தின் வேலைத்திட்டங்கள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு தங்களால் இயன்ற நிதிப்பங்களிப்பை தாராளமாக வாரி வழங்கும்படி சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் பொது மக்களிடம் வேண்டியுள்ளனர்.

(ஐ-31)

## சாயி சிந்தனை

எங்கு சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை என்பன அழுத்திச் சொல்லப்படுகின்றனவோ, சமயம்எதுவாகவுமிருக்கலாம், மொழி எதுவாகவுமிருக்கலாம், போதிப்பவர் எவராகவும் இருக்கலாம், அங்கு சனாதன தர்மம் தோன்றுகின்றது.

பிரேமையை வெளிப்படுத்தும் சக்தி மனிதனுக்கு இருக்கும் வரை, தர்மம் உயிர்த்து நிற்கும். இதில் ஐயம் வேண்டாம். அந்தப் பிரேமை இறைவன் பால் ஸ்திரமாக அமையும் பொழுது, உனது மனோ நிலை மெதுவாகவும், தனராமலும் ஒரு புரட்சிகரமான மாற்றத்திற்கு உள்ளாகின்றது.

அப்பொழுது மனிதன் சக மனிதர்களுடைய இன்ப துன்பங்களில் பங்கு கொள்வான். தொடர்ந்து இவ்வுலகின் தற்காலிகமான இலாப நட்டங்களுக்கு அப்பாற்பட்ட பரமானந்தத்தின் ஊற்றோடு தொடர்பு கொள்கிறான். இறைவன்பால் செலுத்தப்படும் பிரேமையானது, பக்தி என்று சொல்லப்படும் இலக்கை அடைவதற்கு மிகவும் சுலபமான பாதை இதுவே.

ஆதாரம்: Satiya Sai Speaks — Vol. I

# விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம். ஜூன் 5

யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் ஹற்றன் நஷனல் வங்கியின் அனுசரணையுடன் நடத்தி வரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் 17 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

★ யாழ்ப்பாணக் கல்லூரி எதிர் சென். ஜோன்ஸ்கல்லூரி — யாழ்ப்பாணக் கல்லூரி மைதானம்.

★ மானிப்பாய் இந்து எதிர் சென். பற்றிக்ஸ் — மானிப்பாய் இந்து மைதானம்.

(ஐ-4)

# மாணவர் பாதிப்புக்கு யார் பொறுப்பாளிகள்?

## வாசகர் திருமுகம்

கோட்டமட்ட தமிழ்த்தினப் போட்டிகளும் ஜி.சீ.ஈ சாதாரணதர சங்கீத, நடன பாடங்களுக்கான செயன்முறைப் பரீட்சைகளும் ஏக காலத்தில் நடைபெற வேண்டி ஏற்பட்டதால் போட்டிகளுக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்துவதில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் சிரமங்களை எதிர்நோக்க நேரிட்டது.

ஆனால் இத்தகைய நிர்வாகத் தவறுகள் மாணவர்களைப் பாதிப்பது குறித்து எவருமே கவலை கொள்ளாமல் இருக்க முடியாது.

பாதிப்புக்கு ஓர் உதாரணமாக பின்வரும் விடயத்தை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

யாழ். 'நல்லூர் கோட்டங்களில் தமிழ்த்தினப் போட்டி ஏற்பாடுகளில் இடம்பெற்ற தவறுகள் திறமையுள்ள ஒரு மாணவியையும் அவரது பாடசாலைச் சமூகத்தையும் வெகுவாகப் பாதித்திருக்கிறது.

யாழ். செங்குந்த இந்துக்கல்லூரி மாணவி ஒருவர் — அவரது நிகழ்ச்சிக்குப் பொறுப்பான நடன ஆசிரியை கல்வி அதிகாரியின் உத்தரவின் பேரில் நடன செயன்முறைப் பரீட்சைக்கான மத்தியஸ்தராகப் பணியாற்றச் சென்றதால் —கோட்ட மட்டத்திலான போட்டியில் பங்குபற்றும் வாய்ப்பை இழந்தார்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்டோர் உயரதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வந்ததை அடுத்து சம்பந்தப்பட்ட மாணவிக்கெனத் தனியான ஏற்பாட்டில் போட்டியை நடத்துமாறு கல்வி வலயம் ஒன்றின் உயர் அதிகாரி உத்தரவிட்டிருந்தார். அதன்படி போட்டி நடத்தப்பட்டு அந்த மாணவி அதில் முதலிடம் பெற்றுள்ளதாக மத்திஸ்தர்கள் அறிவித்தனர்.

ஆனால் ஏற்கனவே நடந்து முடிந்த கோட்ட மட்ட போட்டிகளில் பங்குபற்றும் வாய்ப்பை இழந்த இந்த மாணவி பின்னர் நடந்த வலய மட்டப் போட்டிக்கும் அனுமதிக்கப்படவில்லை.

இதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எத்தகைய விளக்கத்தையும் அளிக்கவில்லை.

இந்த மாணவி வலய மட்டத்திலும் சிறப்பிடம் பெற்றுப் பின்னர் மாகாண மட்டத்துக்கான போட்டிக்குச் செல்லும் திறமையையும் கொண்டிருக்கக்கூடும்.

போட்டிகளை நடத்துவதில் ஏற்பட்ட நிர்வாகத் தவறுகளுக்கு மாணவியர் பலிக்கடாவாக வேண்டும்?

சம்பந்தப்பட்டோர் இது தொடர்பாக என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறார்கள்?

இத்தகைய தவறுகள் வெளியில் தெரியாமலே மாணவர்களைப் பாதிக்கின்றன. போட்டிகளை ஒழுங்கு சீருடன் நடத்துவதன் மூலம் மட்டுமே மாணவரின் திறமைகளை வளர்க்கலாம்.

அழகன்

கல்வியங்காடு.

# சுகாதார அதிகாரியின் பதில்

03 – 06 – 97 உதயன் பத்திரிகையில் வாசகர் திருமுகம் பகுதியில் ''உணவுச் சாலைகளில் சுகாதாரம்'' என்பது பற்றி ஐயா சச்சிதானந்தம் எழுதியது தொடர்பாக, அவரின் சிந்தனைக்கெட்டாத சில விடயங்களைக் கூற வேண்டியுள்ளது.

யாழ். மாநகரசபைப் பகுதியில் இன்றைய இக்கட்டான சூழ்நிலையிலும் எத்தனையோ ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை எமது மக்களின் நலனுக்காக மேற்கொண்டு வருகின்றோம். அதனைப் பகிரங்கப்படுத்த வேண்டுமென்ற புகழ் நோக்கு எமக்கில்லை.

சுகாதாரப்பகுதி உத்தியோகத்தர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் பத்திரிகையில் வெளிவராதபடியால் அவர்கள் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்பது அன்பரின் கருத்தாகும்.

பத்திரிகையில் செய்தி வெளியிடுவதற்காக நாம் எந்த நடவடிக்கையும் மேற்கொள்வதில்லை. பத்திரிகையில் வெளிவந்தால் தான் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது எனக் கருதுவதும் தவறானதாகும்.

யாழ்ப்பாண மாநகரசபையைப் பொறுத்தவரை இப்பகுதியிலுள்ள சகல உணவுச் சாலைகளுக்கும் குறைந்த கட்டணத்தில் தொடர்ச்சியாகக் கிருமி நாசனி தெளிக்கும் பணி நடைபெற்று வருகின்றது. இச்செயற்பாட்டிற்கு உணவுச்சாலை உரிமையாளர்கள் தமது ஒத்துழைப்பை நல்கி வருகின்றார்கள்.

அண்மைக்காலங்களில் உணவு நஞ்சடைவதால் ஏற்படும் வியாதிகள் எதுவும் எமது பகுதியில் ஏற்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

யாழ். மாநகரசபையின் சுகாதார உத்தியோகத்தர்கள் இன்றைய யதார்த்த சூழ்நிலைக்கேற்ப உணவுச் சாலைகளில் சுகாதார நிலையை மேம்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

கடிதம் எழுதிய அன்பர் கடிதத்தை வரைய முன்னர் எமது அலுவலகத்துடன் தொடர்பு கொண்டிருந்தால் அவருக்கு யதார்த்த நிலையில் எமது செயற்பாடுகளைப் பற்றி தகுந்த விளக்கமளிக்கப்பட்டிருக்கும்.

சுகாதார வைத்திய அதிகாரி, டாக்டர் இ. தெய்வேந்திரன்
யாழ். மாநகரசபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### மலிவு விற்பனை

கட்டில்கள், மரத்தளபாடங்கள் மலிவு விலையில் விற்கப்படும், தொடர்பு கொள்ளும் முகவரி: இல. 140, பலாலி வீதி, (பரமேஸ்வராச் சந்தி அருகில்), திருநெல்வேலி, [திங்கள் — வெள்ளி காலை 9.00 மணி-மாலை 3.30 மணிவரை]
(47610)

### SPOKEN ENGLISH

சுலபமான முறையில் ஆங்கிலம் பயில (எழுத, வாசிப்பதில் சிரமமுள்ளவர்களுக்கு தனி வகுப்பு), ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி (M. L. S), LONDON, 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (47605)

### திருமண சேவை

எம் நிறுவனத்தில் சகல மதத்திலும், சகல உத்தியோகத்திலும் மணமகன், மணமகள் உண்டு. ஜாதகம், புகைப்படத்துடன் நேரில் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: 178, துர்க்கா திருமணசேவை, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் . [47602]

பொருத்தமான விரைவான திருமணங்களுக்கு சகல மதம், உத்தியோகம், தொழில்சார் மணமக்களது பெற்றோர்களும் மணமக்களும் நேரில் வரலாம். சகல தரங்களிலும் மணமக்கள் உண்டு. தொடர்பு:- சேவை நம்பகம், விவாகசேவை, வைமன் வீதி, நல்லூர்.
[47618]

### உடன் தேவை

ரியூட்டறி பாவனைக்கு உகந்த வாங்கு, மேசைகள் அவசரமாகத்தேவைப்படுகின்றன. வைத்திருப்போர், உடன் தொடர்பு கொள்ளவும்; J.T.C. கல்வி நிலையம், பாங்ஷால் வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.
(47620)

### தவறிவிட்டது

சிவபாக்கியம் குணசிங்கம் (5 வேம்படி, தாவடிதெற்கு, கொக்குவில்) என்பவரின் 495540103V இலக்கதேசிய, விசேட அடையாள அட்டைகள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 5 வேம்படி, தாவடி தெற்கு, கொக்குவில் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும்.
.[47262]

### கணிதம், ஆங்கிலம்

O/L 97 இல் Distinction Credit பெறுபேறடைய ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும். அனுபவமுள்ள ஆசிரியர், 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. [47616]

## நகரில் வீதித்தடைகள் நீக்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 5

யாழ். ஆஸ்பத்திரி வீதியில், ஆஸ்பத்திரிக்கு முன்பாகவும், பஸ் நிலையம் முன்பாகவும் இருந்த வீதித்தடைகள் நீக்கப்பட்டுள்ளன.

இவ் விடங்களில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்டிருந்த முட்கம்பி வேலித் தடைகள் அகற்றப்பட்டு, இருவழிப்பாதை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. வீதியின் மத்தியில் இருந்த சைக்கிள் பாதுகாப்பு நிலையமும் அகற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து தற்போது யாழ். ஆஸ்பத்திரி முன்பாகவிருந்த போக்குவரத்து நெருக்கடி ஓரளவு நீங்கியுள்ளது. (ஐ-15)

---

உ

சங்கானை செங்கற்படை

## மகாதேவப்பிள்ளையார் தேவஸ்தானம்

அந்தரீக பிரதிஷ்டா

## மகா கும்பாபிஷேகம்

காலம்: 05-06-1997 வியாழக்கிழமை
மாலை 2-00 மணி: கிரியாரம்பம்.
06-06-1997 வெள்ளிக்கிழமை
காலை 6-00 மணி: கும்பாபிஷேகம்.
7-00 மணி: விசேட பூசை, வீதியுலா.

மா. கனகராஜநாயகம்
ஆலய தர்மகர்த்தா

செங்கற்படை,
சங்கானை. (47591)

---

## 20 ஆவது பிறந்த நாள் வாழ்த்து

### ★ செல்வன் சாந்திராஜ் ★

கைதடிச் சந்தியை வசிப்பிடமாகக் கொண்ட
இரத்தினம் — இந்திரா தம்பதிகளின்
செல்வப் புதல்வன் சாந்திராஜ் அவர்கள்

தனது 20 ஆவது பிறந்த நாளை இன்று 05-06-1997 வியாழக்கிழமை ஜேர்மனியில் நண்பர்களுடன் கொண்டாடுகின்றார். அவரை அப்பா, அம்மா. சுவிசில் வசிக்கும் இந்திரராசா மாமா, விஜயகுமாரி மாமி, திசா மச்சாள் ஆகியோர் கைதடி கயிற்றசிட்டி முருகன் துணையுடன் பல்லாண்டுகாலம் சிறப்பாக வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

மா. இரத்தினம்
கைதடிச்சந்தி.

(47471)

---

## யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

## அறிவித்தல்

நாட்டரிசி, உழுந்து, உழுத்தம்பருப்பு, வாளி, தேயிலை, தவிடு, கடலைப்பருப்பு, வெந்தயம், நற்சீரகம், சோம்பு, சோளன், கௌபீ, சர்க்கரை, சிந்தாமணிக்கடலை, நிலக்கடலை, புளி, பாக்கு, வெள்ளை எள்ளு ஆகிய பொருள்கள் மொத்தவிலையில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுடன் தனியாருக்கும், தனியார் நிறுவனங்களுக்கும் விற்பனைக்குள்ளன. கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளும்படி வேண்டிக்கொள்கின்றோம்.

பொது முகாமையாளர்
யாழ். மா. வி. உ. ச. நு. கூ. ச. சமாசம்

இல. 111, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்,
1997 - 06 - 03 (சி-867)

---

## ஓராண்டின் நினைவலைகள்



| மண்ணின் வரவு: | விண்ணகம் விரைவு: |
| --- | --- |
| 02 | 05 |
| 10 | 06 |
| 1961 | 1996 |

### அமரர் நடராசா சேகர்

படுத்திடும் கட்டில் உண்ட பாத்திரம் நடந்த பாதை எடுத்து நீ ஓடும் காரின் உருவது காண நெஞ்சம் வெடிக்குதே சேகர்! ஆண்டு ஒன்றிதன் நிறைவு கண்டு வடிக்கின்ற கண்ணீரோடு அஞ்சலி தருகின்றோமே.

- குடும்பத்தினர்.

இமையாணன் வடக்கு,
உடுப்பிட்டி.

---

உ

அம்பிகை துணை

கொக்குவில்

## ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயம்

பஞ்சகுண்ட பட்க்ஷ புனராவர்த்தன பிரதிஷ்டா

## மஹா கும்பாபிஷேகம்

குடமுழுக்குப் பெருஞ்சாந்தி விழா

**06 - 06 - 97** வெள்ளிக்கிழமை:
காலை 9.00 மணிமுதல் மஹா கும்பாபிஷேக பூர்வாங்க கிரியைகள் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று,

**07 - 06 - 97** சனிக்கிழமை:
காலை 8.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை எண்ணெய்க் காப்பு சாத்துதலும்,

**08 - 06 - 97** ஞாயிற்றுக்கிழமை:
காலை 6.02 மணி முதல் 6.52 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில் மஹா கும்பாபிஷேகமும், நடைபெறும்.

— பரிபாலன சபை

(47611)

---

## பிரவேச, பாலபண்டித, பண்டித வகுப்புக்கள்

இடம்:- கணேச வித்தியாசாலை, சித்தன்கேணி
காலம்:- 97 - 06 - 07 சனிக்கிழமை 9 மணி
விரிவுரைகள்:- வ. தொ. த. சங்க அறிஞர் குழு
குறிப்பு:- யா. ஆ. தி. பா. வி. சங்கப் பாட விதானத்துக்கு அமைவாகக் கருந்தரங்குகளும்-போயாதினங்களில் இடம்பெறும்.

ஆர்வலர் சமுகந்தரவும்.

—வட்டுக்கோட்டைத் தொகுதித்
தமிழ்ச் சங்கத்தார்.

(47613)

---

சங்கானை

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வ/உ)

## நலமுடன் வாழ வாழ்த்துகிறோம்

யாழ். மாவட்ட அரச அதிபர்

### திரு. செ. பத்மநாதன்

அவர்களின் நற்பணிகளை, சேவைகளை, நயந்து பேசும் நன்னாளில் அவர் எல்லா நலனுடனும் நிறைவுடனும் நீடூழி வாழ்ந்து, இன்னும் பல நற் சேவைகள் நயம்படவே புரிந்து நன் மகனாய் மக்கள் போற்ற வாழ்க என வாழ்த்துகின்றோம்.

தலைவர், பணிப்பாளர், பணியாளர்கள்.

(சி/868)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
| --- | --- |
| 22 | 27 |
| 02 | 05 |
| 1912 | 1996 |

### அமரர் சீதாலட்சுமி அம்மா சிவானந்தக்குருக்கள்

திதி: பிரதமை- 05—06 -1997

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்த குடும்பத்தலைவியின் ஓராண்டு நினைவாக, அன்னாரின் ஆத்மா சாந்திபெற எங்கள் குல தெய்வமாகிய இலுப்பைத்தாழ் முருகனையும், கூடத்து மனோன்மணி அம்பாளையும் பிரார்த்திக்கின்றோம்.

சிவஸ்ரீ சி. சோமசுந்தரக் குருக்கள்,
சிவஸ்ரீ சி. சிவநித்தியானந்தக் குருக்கள்.

''சிவானந்த பவனம்'',
முருகமூர்த்தி வீதி,
சங்கானை. (47608)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## சூழல் நாள்

உலகச் சூழல் நாள் இன்று ஜூன் மாதம் ஐந்தாம் திகதியாகும். பூமித் தாயின் உடலுக்குப் பங்கம் ஏற்பட்டால், அல்லது அவளுக்கு நோய்கண்டால்உலக மக்களுக்கு பல வகைக் கேடுகளும், பெரும் பாதிப்புகளும் உண்டாகும். அத்தகைய ஒரு நிலையைத் தடுக்கும் முயற்சியாக, தவிர்க்கும் முயற்சியாக பூமியின் சூழலைப் பேணுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையிலேயே ஐக்கிய நாடுகள் சபையினால் உலக சூழல் நாள் பிரகடனப் படுத்தப்பட்டது.

ஆரம்பத்தில் - இரண்டு மூன்று தசாப்தங்களுக்கு முன்னர்— சூழலைப்பேணும் விவகாரம் வளர்ச்சி கண்ட நாடுகளுக்குரிய பிரச்சினையாகக் கருதப்பட்டது. அதற்குக் காரணமும் இருந்தது. விஞ்ஞானத் துறையில் அதிவேக முன்னேற்றம் கண்டு வந்த அபிவிருத்தி அடைந்த நாடுகளே, தமது நவீன கண்டு பிடிப்புக்கள் அவற்றின் பயன்பாடுகள் மூலம் பூமியை மாசுபடுத்தி வந்தன.

பெரும் தொழிற்சாலைகளில் இருந்து கக்கப்படும் நச்சு வாயுக்கள் முதல் அணு உலைகளின் கதிர்க் கசிவுகள் வரை, ஓசோன் படலத்தில் ஏற்பட்ட ஓட்டை தொடக்கம் இரசாயன ஆயுதங்கள்மற்றும் நுண்ணணுக் கிருமி ஆயுதங்கள் வரை பல சூழல் ஆபத்துக்கள் அந்த நாடுகளையே பெரிய அளவில் பாதித்து வந்தன.

ஆனால் இப்போது சூழல் பாதிப்பினால் மக்களுக்கு உண்டாகும் கெடுதல்கள் அனைத்துலக ரீதியாக மிக ஆபத்தான நிலையை அடைந்து வருகிறது.

அபிவிருத்தி என்ற பெயரில் நவீன தொழில் நுட்பம் அல்லது நவீனமயப்படுத்தல் என்ற பெயரில் பூமியின் வளங்கள் அளவுக்கு அதிகமாகச் சுரண்டப்படுகின்றன; தீண்டப்படுகின்றன. அத்தோடு சூழலும் மாசுபடுத்தப் படுகிறது. இவை பூமியின் சமநிலையிலும், இயல்பான, இயற்கையான இயக்கத்திலும் பல ஒவ்வாத மாற்றங்களைக் கொண்டு வரும் ஆபத்து உண்டு. இந்த மாற்றங்கள் காலப்போக்கில் பூமியில் உயிரினங்கள் வாழ்வதற்கான வாய்ப்புகளைக் குறைத்துவிடும் என்று கூட அஞ்சப்படுகின்றது.

இருபத்தோராம் நூற்றாண்டுக்குள் பிரவேசிக்கவுள்ள வேளையில், கணனியின் விந்தைகள் ஒரு காலகட்டத்தில் மனித வாழ்க்கையை பல துறைகளிலும் ஸ்தம்பிக்கச் செய்யலாம் என அச்சம் தெரிவிக்கப்படும்வேளையில், தொலைத் தொடர்புத் துறை முன்னேற்றத்தால் உலகத்தை ஒரு கிராமம் ஆக்கிவிடலாம் என்று கருதப்படும் வேளையில், எல்லா அமளி துமளிகளுக்கும் மத்தியில் பூமித் தாயைப் பேணிச் சீராட்டிப் பாதுகாக்க மறந்துவிடக் கூடாது. சூழலின் தூய்மையை மாசுபடாமல் காப்பதில் கவனம் எடுக்கவேண்டும்.

அனைத்துலக மட்டத்தில், நாடுகளில், பிரதேசங்களில், நகரங்களில், கிராமங்களில் என்று எல்லா மட்டங்களிலும் சூழலைப் பேணுவதில் மக்கள் தம்மை ஈடுபடுத்தல் மிக அவசியத் தேவையாகிறது.

# 28 டாக்டர்களில் ஒருவராவது இன்னும் பதவி ஏற்கவில்லை

யாழ்ப்பாணம், ஜூன் 5

யாழ். மாவட்ட ஆஸ்பத்திரிகளுக்கு நியமனம் பெற்ற 28 டாக்டர்களும் இன்னும் பதவி ஏற்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது:

பல்கலைக்கழக மருத்துவ பீடங்களில் இருந்து வெளியேறிய டாக்டர்களில் 28 டாக்டர்கள் யாழ்.போதனா வைத்தியசாலை உட்பட யாழ். மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளுக்கு கடந்த முதலாம் திகதி முதல் நியமனம் பெற்றிருந்தார்கள்:

இவர்களில் ஒருவராவது நேற்று வரை பதவி ஏற்கவில்லை என்று யாழ். போதனா வைத்தியசாலை மற்றும் சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன:

யாழ். மாவட்டத்துக்கு நியமனம் பெற்றவர்களில் 4 தமிழர்களும், 24 சிங்களவர்களும் அடங்குவர். (இ-3)

## வாழ்க்கை செலவு சுட்டெண்

வலி—தெற்கு, ஜூன் 5

இவ் வருட மே மாதத்துக்கான வாழ்க்கைச் செலவுச் சுட்டெண் 2047.4 என தொகை மதிப்பு புள்ளி விவரத் திணைக்கள குறிப்பேடுகள் தெரிவிக்கின்றன.

[இ-152]

# அமைச்சரவை மாற்றம் தற்போதைக்கு இல்லை

## ஜனாதிபதி தெரிவிப்பு

அமைச்சரவையில் மாற்றங்கள் ஏற்படும் எனப் பரவலாக எதிர்பார்க்கப்பட்ட போதும் —

அமைச்சரவை மாற்றம் இடம்பெற மாட்டாது என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அறிவித்துள்ளார் என கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை — அமைச்சர் சி.வி. குணரத்தினவுக்கும், அமைச்சர் ஸ்ரீமானி அத்துலத்முதலிக்கும் இடையில் நிலவும் மோதலை தணிக்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது:

(இ-150-3)

# வனவிலங்கு வியாபாரத்தில் இலங்கை முக்கிய தளம்!

## தடுக்க போதிய சட்டங்கள் இல்லை

வத்திக்கான், ஜூன் 5

இலங்கையில் வனவிலங்குகளை வியாபாரத்திற்காகக் கடத்துவோரைத் தண்டிப்பதற்கான போதிய சட்டங்கள் இல்லாமையால், உலகளவில் வனவிலங்குகளை வியாபாரம் செய்வதற்கான இடமாக இலங்கை உள்ளது.

அபூர்வ விலங்குகளை ஐரோப்பாவுக்கு கடத்துவதற்கு இலங்கையைப் பயன்படுத்துவது கடந்த ஆண்டுகளில் அதிகரித்துள்ளது என்று சுங்க இலாகா அதிகாரி சமந்தா குணசேகரா கூறியுள்ளார்.

வண்ணத்துப்பூச்சிகள், பறவைகளின் கூண்டுகள்,மிருகத் தோல்கள், ஆமை ஓடுகள், பட்டுப்பூச்சிகள், புதுவிதமான பறவைகள், நரித் தலைகள் ஆகியவை இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்து இலங்கை வழியாகத் தினமும் அனுப்பப் படுகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-5)

# குடாநாட்டின் சுற்றுச் சூழல் பாதுகாக்கப்பட வேண்டும்

## துணை வேந்தர் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 5

''யாழ். குடாநாடு யுத்த அனர்த்தங்களினால் பெரும் எண்ணிக்கையில் தாவரப் போர்வையை இழந்து நிற்கின்றது. இத்தருணத்தில் தனியாகவும், கூட்டாகவும் செயற்பட்டு சுற்றுச் சூழலைப் பாதுகாக்க வேண்டும்.''

யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை மேற்கண்டவாறு கேட்டுள்ளார்.

இன்று கொண்டாடப்படும் சர்வதேச சுற்றுச்சூழல் பாதுகாப்புத் தினத்தை யொட்டி அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜூன் 5 உலக சுற்றுச்சூழல் தினமாகும். இரு தசாப்தங்களுக்கும் முன்னர் ஸ்ரொக்ஹோம் மாநாட்டில் உலகச் சுற்றுச் சூழலைப் பேண எடுத்த பலன், இன்று கோள ரீதியாகவும், தேசிய ரீதியாகவும், நிறுவன ரீதியாகவும் உள்ளூர் மட்டத்திலும் ஏற்பட்டிருக்கும் உணர்வை இத் தினத்தில் நல்ல முறையில் பயன்படுத்தி இலக்குகளை எய்த வேண்டும்.

யாழ்ப்பாணக் குடா நாடு யுத்த அனர்த்தங்களினால் பெரும் எண்ணிக்கையில் தாவரப் போர்வையை இழந்து நிற்கின்றது. மேலும் நீர் நிலைகள் மாசடைவதால் பாசிபடர்ந்து இருப்பதுடன் மனிதனது பயன்பாட்டிற்குத் தகாத நிலைக்கும் வருகின்றன என்பதை யாவரும் அறிவீர்கள்.

போர் அனர்த்தங்களின் காரணமாக நகரங்கள், கிராமங்கள் என்பவற்றின் பல பகுதிகள் இடிபாடுகள்கொண்டனவாகவும் அவை உரிய முறையில் அகற்றப்படாமையுமுள்ளன. ஆகவே, இத்தருணத்தில் சூழலை மேம்படுத்துவதற்குத் தனியாகவும் இணைந்தும் செயற்பட்டால் உள்ளூர் மட்டத்திலும், பூகோள மட்டத்திலும் பங்களிக்கின்றோம் என்ற நிலையையிட்டு நமது கடமையைச் செய்கிறோமென மகிழ்ச்சியடையலாம்: —

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

### நாளை

**வைகாசி 23**

**வெள்ளிக்கிழமை**

திதி: பிரதமை

பிற்பகல் 12.51 வரை.

நட்சத்திரம்: மிருகசீரிடம்

மாலை 6 15 வரை;

சுபநேரம்: 5 52-7·22

[illegible]

(வாக்கிய [illegible] இருக்கும் பழைய நேரப்படி)

# பளை பொதுச்சந்தை திருத்தப்படும்

தென்மராட்சி, ஜூன் 5

பளை பொதுச் சந்தைக் கட்டடங்கள் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்தினால் ஐந்து இலட்சம் ரூபா செலவில் புனர்நிர்மாணிக்கப்பட உள்ளன.

முன்னர் இடம்பெற்ற தாக்குதல்களால் சேதமடைந்துள்ள சந்தைக் கட்டடங்களைத் திருத்த இந்த நிதி பயன்படுத்தப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

# இல்ல விளையாட்டுப் போட்டி

ஈவினை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டிகள் இன்று காலை 8 30 மணிக்கு அதிபர் ந. ஜெயகுமாரன் தலைமையில் நடைபெறும்.

ஈவினை கற்பகவிநாயகர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ தி. கெங்காதரக் குருக்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.(இ-152)

# சேவைக்கால பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், ஜூன் 5

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டத்தில் ஆண்டு 5 இல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான ஆண்டு 5 புதிய பாடத் திட்ட அறிமுக சேவைக் காலப் பயிற்சி நெறி இன்றும் நாளையும் எதிர்வரும் 9ஆம் திகதியும் யூனியன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

ஆண்டு 5 இல் கற்பிக்கும் ஆசிரியர்கள் தவறாது சமுகமளிக்கும் படி கோட்டக் கல்வி அலுவலர் ஆ. கமலநாதன் கேட்டுள்ளார். (ஐ)

# சமய சந்திகளில்

வடமராட்சி, ஜூன் 5

மேலைப் புலோலி வத்தனை அருள் மிகு ஸ்ரீ விநாயகர் கோவில் சம்புரோக்ஷண அஸ்டபந்தன மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

அல்வாய் கிழக்கு மாயக்கைப் பிள்ளையார் ஆலய பிரதமகுரு கிரியா கலாப மணி சிவஸ்ரீ தி. மாணிக்கவாசகக் குருக்கள் பிரதிஷ்டா பிரதம குருவாக இருந்து கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பார். ஐ - (173)

★ ★ ★

தொண்டமானாறு செல்வச் சந்நிதியில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில், சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை பண்பாட்டுப் பேரவை நடத்தி வரும் வாராந்த நிகழ்வுகளில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை ''வினை ஓட விடும் கதிர்வேல்மறவேன்' என்னும் தலைப்பில் சுவாமி சித்ரூபானந்தா உரையாற்றுவார்.

இந் நிகழ்வுக்கான அறிமுகவுரையை வ. ஆ. தங்கமயில் நிகழ்த்துவார்.

(ஐ - 173)

★ ★ ★

கொழும்புத்துறை மேற்கு வதரிபீட விநாயகர் ஆலயத்தில் நடராஜப் பெருமானுக்கு தனியான மண்டபம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் வைபவம் நாளை வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது. அன்றைய தினம் முற்பகல் 11 மணிக்கு வைரவர் விஷேட பொங்கலும் நடைபெறும் (ஐ - 4)

★ ★ ★

ஆனைக்கோட்டை ஸ்ரீ வரத விக்ன விநாயகர் (சம்பந்தப்பிள்ளையார்) ஆலய புனராவர்த்தனப் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக பூர்வாங்க கிரியைகள் நாளை வெள்ளி காலை 9 மணிமுதல் ஆரம்பமாகின்றன.

மறுநாள் சனி காலை 7மணி முதல் 3 மணி வரை எண்ணெய்க்காப்பும், 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைமகா கும்பாபிஷேகமும் இடம் பெற்று தொடர்ந்து 15 நாட்கள் மண்டலாபிஷேகமும் நடைபெறும்.

(ஐ - 100)

★ ★ ★

அனலை தீவு ஸ்ரீ ஹரி ஹர புத்திர ஐயனார் கோயில் மஹாகும்பாபிஷேகம் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 5.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

மஹா கும்பாபிஷேகத்தை முன்னிட்ட பூர்வாங்கக்கிரியைகள் சென்ற திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணி தொடக்கம் மறுநாள் சனிக்கிழமை பகல் ஒரு மணி வரை எண்ணெய்க் காப்பு சாத்துதலும் நடைபெறும் ( ஐ - 4)

★ ★ ★

அம்பன் கந்தசுவாமி கோயிலில் கடந்த மாதம் 11 ஆம் திகதி முதல் கந்த புராணபடன விரிவுரை நடைபெற்று வருகிறது.

இங்குள்ள பௌராணிகர் இவ் விரிவுரையை நடத்தி வருகிறார்.

எதிர்வரும் ஆனி உத்தர தினத்தன்று திருக்கல்யாணப் படிப்புடனும்,மறு நாள் தீர்த்தோற்சவத்துடனும் கந்த புராணபடனவிரிவுரைநிறைவு பெறும். (ஐ-173)

★ ★ ★

மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் தேவஸ்தான புனராவர்த்தன பிரதிஷ்டா 'மஹா கும்பாபிஷேக விழா' எதிர்வரும் ஞாயிறு அதிகாலை 5. 30 மணிமுதல் 6-16 மணி வரை நடைபெறவுள்ளது.

மஹாகும்பாபிஷேக விழாவிற்கான கிரியாகால நிகழ்வுகள் நேற்றுமுதல் ஆரம்பமாகியுள்ளன. அடியார்கள் எண்ணெய்க் காப்புச் சாத்துதல்-சனிக்கிழமை காலை 8மணிமுதல், மாலை 4மணிவரை நடைபெறும்.

(ஐ-31)

★ ★ ★

வலிகாமம் தெற்கு,ஜூன் 5

உடுவில் சின்னக்குளம் பெரியதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் நிகழ்ச்சி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ளது.

(ஐ-152)

★ ★ ★

இணுவில் ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் தற்போது நடைபெற்று வருகின்றது. எதிர்வரும் 7ஆம் திகதி சனிக்கிழமை பகல் தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

(ஐ-152)

★ ★ ★

பாசையூர் புனித அந்தோனியார் திருவிழா நேற்றுப் புதன்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. எதிர்வரும் 12 ஆம் திகதி நற்கருணை விழாவும், 13 ஆம் திகதி புனித அந்தோனியார் பெருவிழாவும் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினை உற்சவத்தையொட்டி நாளை விசேட பஸ் சேவைகள்

நாளை ஆரம்பமாகவிருக்கும் நயினை ஸ்ரீநாகபூஷணி அம்மன் தேவஸ்தான உற்சவ தினத்தையொட்டி விசேட பஸ் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்று யாழ். மேலதிக அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பழைய தபால் கந்தோருக்கு முன்பாகவுள்ள முற்றவெளியில் இருந்து காலை 7 மணிக்கு பஸ் சேவை ஆரம்பிக்கும். மாலை 4.30 மணிக்குக் குறிக்காட்டுவானில் இருந்து பஸ்கள் திரும்பி வரும்.

இந்த பஸ்களில் செல்லும் அடியார்கள் இடையில் இறங்க முடியாது என்றும்—

குறிக்காட்டுவானுக்கு நேரடியாகச்செல்ல வசதியாகவே இச்சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்றும்—அவர் தெரிவித்தார்.

பாதுகாப்புப் படையினர் பக்தர்களின் அடையாள அட்டையைப் பெற்றுக் கொண்டு அதற்குப் பதிலாக அட்டை ஒன்றை வழங்குவர் என்றும்—

நயினாதீவில் இருந்து திரும்பியதும் இந்த அட்டையைக் கையளித்து அடையாள அட்டையைப் பெறலாம் என்றும் —அவர் தெரிவித்தார்.

குறிக்காட்டுவான் பேச்சி அம்மன் கோயிலில் வாகனங்கள் தரித்து நிற்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (இ-3)

## லயன் எயார்...

(முதலாம் பக்கத் தொடர்)

நேற்று சென்ற பயணிகள் விமான சேவை நடைபெறாததால் திரும்பியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## சென்ஹிட்ஸ்...

(முதலாம் பக்கத் தொடர்)

முன்னாள் மத்திய அமைச்சர் கே.கே. திவாரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

சந்திரசுவாமி மற்றும் அவர் உதவியாளர் அகர்வால் மீது ஒருவரின் மதிப்புக்குக் குந்தகம் ஏற்படுத்தும் விதத்தில் தவறான சாட்சிகள், கிறிமினல் சதித் திட்டம் மற்றும் போலி ஆவண மோசடி ஆகியவற்றுக்காக இந்திய பீனல் சட்டத்தின் கீழ் நீதிபதி குற்றஞ்சாட்டியுள்ளார்.

மேலும் இரு வழக்குகளை நரசிம்மராவ் எதிர்நோக்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்)

அதன் பின் அந்த டிராக்டரில் வந்த படையினர் பஸ்ஸின் சாரதியைத் தாக்கியதாகவும் —

அதன்பின் மயக்கமடைந்த அவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாகவும் — யாழ். டிப்போ வட்டாரங்கள் தெரிவித்தன.

இச்செயலை ஆட்சேபித்து யாழ். டிப்போவைச் சேர்ந்த சாரதிகளும் ஊழியர்களும் நேற்றுக் காலை 8.30 மணியளவில் திடீர் வேலை நிறுத்தத்தில் குதித்ததால் பஸ் சேவைகள் ஸ்தம்பிதம் அடைந்தன.

இதையடுத்து 512 பிரிகேட் அதிகாரியுடன் யாழ். டிப்போவில் நடந்த கலந்துரையாடலில் பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

இது போன்ற சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெறுகின்றன என்றும்—

இனிமேல் இது போன்ற சம்பவங்கள் இடம்பெறாமல் இருக்க உறுதிதரவேண்டும் என்றும் — அக்கலந்துரையாடலின்போது கோரிக்கைவிடப்பட்டது.

இராணுவ அதிகாரியின் உறுதிமொழியையடுத்து மீண்டும் 10-30 மணியளவில் பஸ்சேவை வழமைக்குத் திரும்பியது. [இ-3-15]


புதுமையும் எழிலும் பொலியும்
உங்கள் அபிமான வார இதழ்

சஞ்சீவி

மீண்டும் 07-06-1997 முதல்
சனிக்கிழமை தோறும் வெளிவரும்.
விலை ரூ. 8/-



தேவை

தேநீர்க் கடைக்குத் தேவையான பொய்லரும், குளிர்சாதனப் பெட்டியும் உடன் தேவை.
விலை விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

பொது முகாமையாளர்
சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்.
(சி/874)



விநைல்ஸ் கல்வி நிலையம்
சுன்னாகம்
O/L பகல் நேர வகுப்புக்கள்

ஆரம்பம்:- 06 - 06 - 1997
வெள்ளிக்கிழமை காலை 8.00 மணி

அனுமதிகளை இன்றில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

- நிர்வாகம்

(47263)


# லொறி உரிமையாளர் கவனத்துக்கு

பொருள்களை ஏற்றிச் செல்வதற்கான லொறிக்கூலி கொடுப்பனவு தொடர்பாக கேள்விகளைச் சமர்ப்பித்த லொறி உரிமையாளர்களை அல்லது அவரின் பிரதிநிதி ஒருவரை எதிர்வரும் 8 ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ். செயலக மாநாட்டு மண்டபத்துக்கு வருமாறு யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார். (இ-3)

## ரி. என். எல்...

(முதலாம் பக்கத் தொடர்)

இதையடுத்து நீதிவான் அவரை விடுதலை செய்து, விடுதலை செய்வதற்கான காரணத்தை எதிர்வரும் 10 ஆம் திகதி எழுத்து மூலம் தெரிவிப்பதாக அறிவித்தார். (இ-21-3)

## இரு வெவ்வேறு...

(முதலாம் பக்கத் தொடர்)

சயனைட் வில்லை ஆகியன கைப்பற்றப்பட்டதாக பொலீஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தின்போது பொலீஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் 2 பொது மக்கள் உயிரிழந்தனர்; 3 பேர் காயமடைந்தனர். தற்செயலாக இது இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இரண்டாவது சம்பவத்தில் நேற்று நண்பகல் 12மணியளவில் வாழைச்சேனை நாசிவன் தீவு அரசினர் பாடசாலை வளவுக்குள் ஷெல் ஒன்று வீழ்ந்து வெடித்ததில் 5மாணவர்கள் உட்பட 12பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் பெண் ஒருவர் உயிரிழந்தார். (இ-21-3)

## பிரேமாவின்...

(முதலாம் பக்கத் தொடர்)

வகிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிரேமதாச நிலையம்என்ற அமைப்பின் ஆதரவில் இம்மாத இறுதியில் பிரேமதாசவின் நினைவு தினத்தைக் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்படுவதாகவும்—

புதியகட்சியை ஆரம்பிப்பதற்கான ஆதரவை திரட்டும் வகையில் இந்த நிகழ்ச்சி நடத்தப்பட விருப்பதாகவும் —தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிகழ்ச்சிகளிலும், இது தொடர்பான கூட்டங்களிலும் கலந்து கொள்ளக் கூடாது என்று ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஐ. தே. க. அரசியல்வாதிகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

"பிரேமா காலத்தில்சாதாரண மக்களின் கட்சியாக இருந்த ஐ. தே. க. ரணில் தலைமையில் மீண்டும் முதலாளித்துவ கட்சியாக மாறிவிட்டது" என்று பிரேமா ஆதரவாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சுகததாச விளையாட்டரங்கை கூட்டம் நடத்த ஐ. தே. கவுக்கு அனுமதி வழங்க அரசு மறுத்து வருகிறது என்றும்—

ஆனால் பிரேமா ஆதரவாளர்கள் கூட்டம் நடத்த சுகததாச விளையாட்டரங்கை வழங்கியதன் மூலம் அரசு இவர்களுக்கு உதவுகின்றது என்றும்—ஐ. தே. க. வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-150-3)


NEW SCIENCE ACADEMY
NALLUR
A/L 98
கணக்கியல்
பாலவாசன்
பங்குடைமை
ஆரம்பம் 08.06.97 6.30
Mon, Fri.
(47637)


ஈ. பி. டி. பி யில் இருந்து

# வெளியேற்றப்பட்ட எம். பிக்கள் இருவரும் ஆதரவாக வாக்களிப்பர்

கொழும்பு, ஜூன் 5

ஈ. பி. டி. பி. அமைப்பில் இருந்து வெளியேற்றப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான அ. இராமமூர்த்தியும் அ. இராமேஸ்வரனும் இன்று நடைபெறும் அவசர கால நீடிப்புப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்க இணங்கியுள்ளனர்.

கடந்த இரு தினங்களாக அவர்களுடன் ஆளும் கட்சி நாடாளுமன்ற கொறடாவும், கல்வி, உயர் கல்வி அமைச்சருமான ரிச்சர்ட் பதிரானவும், சிரேஷ்ட அமைச்சர்கள் சிலரும் நடத்திய பேச்சுக்களை அடுத்தே இந்த இணக்கம் ஏற்பட்டுள்ளது.

" உங்கள் கட்சிக்குள் முரண்பாடுகள் இருக்கலாம். அரசாங்கத்துடன் உங்களுக்கு முரண்பாடு இல்லையே; ஆகவே அரசோடு சேர்ந்து வாக்களியுங்கள் " என்று அவர்களிடம் அமைச்சர்கள் கோரிக்கை விடுத்தனர்.

ஆளும் கட்சி வரிசையில் தமக்கு இடம் ஒதுக்கித் தருமாறு அவர்கள் அமைச்சர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-21-3)

களுவாங்கேணித் தாக்குதலில்

# ஆயுதங்கள் கைப்பற்றியதாக புலிகள் தரப்பில் அறிவிப்பு

மட்டக்களப்பு மாவட்டம், வாழைச்சேனை, களுவாங்கேணிப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை மாலை நடத்திய தாக்குதலில் ஆயுதங்களைக் கைப்பற்றியதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

ரி 81 எல். எம் ஜி — 2, ரி 56 ரக துப்பாக்கி— 8, பிஸ்டல் — 3, 40 எம். எம். மோட்டார் — 10 உட்பட பல ஆயுத தளபாடங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதலின்போது தமது தரப்பில் சேதம் எதுவும் ஏற்படவில்லை என்றும் புலிகள் அறிவித்துள்ளனர்.

அதேநேரம் — கடந்த திங்கட்கிழமை 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கை துருப்புக்களுடன் இடம்பெற்ற மோதல் ஒன்றில் மயூரன், தவசீலன் ஆகிய போராளிகள் களப்பலியானார்கள் என்று புலிகள் அறிவித்துள்ளனர், (இ-21-3)

## ஒட்டிசுட்டான்...

(முதலாம் பக்கத் தொடர்)

றித் தாக்குதல்கள் இடம் பெற்றதாகவும் —

இந்தத் தாக்குதல்களின் போது கற்சிலைமடுப் பகுதியில் 4 பேர் காயம் அடைந்ததாகவும் — புலிகளின் குரல் வானொலி மேலும் தெரிவித்தது.

பூதன் வயல் என்ற இடத்தில் உள்ள இந்து ஆலயம் ஒன்றில் பொங்கல் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் அப் பகுதியில் ஷெல் ஒன்று வீழ்ந்து பெரும் சத்தத்துடன் வெடித்தது என்றும் —

பொங்கல் விழாவுக்கு வந்தோர் சிதறி ஓடினர் என்றும் — மேலும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் கோடாலிக் கல் என்ற இடத்தில் கிபிர் விமானம் குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தி உள்ளது. சேத விவரம் குறித்து தெரிய வரவில்லை.

விமானப்படையின் வான் தாக்குதல்களாலும் இராணுவத்தின் ஆட்லறித் தாக்குதல்களாலும் ஒட்டிசுட்டான், கற்சிலைமடு ஆகிய இடங்களில் இருந்து மக்கள் பெரும் எண்ணிக்கையில் வெளியேறுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதே சமயம் ஒட்டிசுட்டானுக்குச் செல்லும் பாதையில் உள்ள விடுதலைப் புலிகளின் பங்கர்களை அழிக்கும் நோக்குடன் செவ்வாய்க்கிழமை இராணுவக் கொமாண்டோக்கள் நெடுங்கேணியில் இருந்து புதிய தாக்குதல் நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்தனர். இது ஒரு மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த நடவடிக்கையின் போது மூன்று கொமாண்டோக்கள் புலிகளின் மோட்டார் தாக்குதல்களால் பலியானதாகவும் இராணுவ தரப்பினர் தெரிவித்தனர். [இ-3-10-164]

## திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்)

இரவே தமது இடங்களுக்குத் திரும்பி விட்டனர்.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இனந் தெரியாதவர்களால் அங்கு வைத்து இரு பொலீஸார் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இதில் சப்— இன்ஸ்பெக்டர் கபீலாவும், கான்ஸ்டபிள் வசந்தராஜபிள்ளையும் உயிரிழந்தனர். இதில் பொதுமகன் ஒருவரும் இறந்தார். அவர் நேற்று மாலை வரை இனங்காணப்படவில்லை.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து நேற்றுக் காலை அங்கு சென்ற படையினர் அங்கு இருந்த பொது மக்கள் மீது தாக்குதல் நடத்தினர் என்றும்—

இதில் ஒரு சிறுவன் காலில் சூட்டுக்காயத்துக்கு உள்ளானார் என்றும்—

குழந்தையை கையில் வைத்திருந்த ஒருவரின் தலையில் காயம் ஏற்பட்டது என்றும்—அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

காயமடைந்தவர்கள் திருகோணமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று திருகோணமலை சந்தைப்பகுதி உட்பட அதன் சுற்றாடல் பகுதிகளில் தேடுதல் இடம்பெற்றது.

இதற்கிடையில் பொங்கல் விழாவுக்கு பாதுகாப்பு வழங்கிய இரு பொலீஸார் திருமலையில் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

சுட்டுக் கொல்லப்பட்ட இருவரும் சல்லி பொலீஸ் காவலரணைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-3-4-150)

## நெடுங்கேணியில்...

(முதலாம் பக்கத் தொடர்)

மூலம் அனுப்பி இருந்தது.

நெடுங்கேணி ப. நோ. கூ. சங்க களஞ்சிய அறையிலும் நெடுங்கேணி நெல் சந்தைப்படுத்தும் களஞ்சிய அறைகளிலும் 290 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் நெடுங்கேணி ப. நோ. கூ. சங்கத்தின் கண்காணிப்பின் கீழ் வைக்கப்பட்டிருந்தன.

இராணுவ நடவடிக்கையின் பின்னர் நெடுங்கேணியில் எவரும் வசிக்கவில்லை.

நிலைமை இவ்வாறு இருக்க உண்மைக்குப் புறம்பான விதத்தில் புலிகளின் உணவுக் களஞ்சியம் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருப்பது ஆச்சரியம் தருகிறது.

இப்படி மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05-06-1997 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org